# பாரதிதாசன் பல்கலைக்கழகம்
(Accredited with 'A+' Grade by NAAC in the Third Cycle)
திருச்சிராப்பள்ளி–620024

முனைவர்.சு.சீனிவாச ராகவன், எம்.ஏ.,எம்.எல்.ஐ.எஸ்ஸி., பி.எச்.டி.,
தேர்வு நெறியாளர் (பொ)

தொலைபேசி:0431- 2407016 / 2407060
தொலை நகலி: 0431-2407444
மின்னஞ்சல்: coe@bdu.ac.in
இனையதளம்: www.bdu.ac.in


---

இ.நி/தே.பி/பட்டயம்/சான்றிதழ்/ஏப்ரல் 2021 தேர்வு/ தேதி: 20.04.2021

பெறுநர்

1.முதல்வர் அவர்கள், பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்று (தன்னாட்சி பெறாத) பட்டயப்படிப்பு மற்றும் சான்றிதழ் படிப்புகள் பயிற்றுவிக்கப்படும் கல்லூரிகள். (மற்றும்)
2.முதல்வர் அவர்கள், **BDU-BDC** –ன் வெளிவளாக திட்டம் வாயிலாக பட்டயப்படிப்பு பாடங்கள் நடத்தப்பெறும் நிறுவனங்கள் மற்றும் மருத்துவமனைகள்.

அய்யா/அம்மா,

பொருள்: பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகள் - ஏப்ரல் 2021 தேர்வுக்கு மாணவர்களிடமிருந்து தேர்வு விண்ணப்பங்கள் பெறுவது - தேர்வுகள் துவங்கும் நாள் அறிவிப்பது - தொடர்பாக.

------------

ஏப்ரல் 2021 பருவத்திற்கான, நடைபெற இருக்கும் பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகளுக்கான பூர்த்தி செய்யப்பட்ட தேர்வு விண்ணப்பங்கள், தேர்வுக் கட்டணத்துடன் பெறுவதற்கான கடைசி நாள் மற்றும் தேர்வுகள் துவங்கும் நாள் ஆகியவை குறித்து சம்பந்தப்பட்ட கல்லூரி முதல்வர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது. மேலும், **BDU-BDC**-யின் வெளிவளாக திட்டத்தின் மூலம் பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகள் நடத்தப்பெறும் நிறுவனம் மற்றும் மருத்துவமனை இயக்குநர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மாணவர்களிடமிருந்து பெறுவதற்கு கடைசி நாள் | **30.04.2021** | வெள்ளிக்கிழமை |
| பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் கல்லூரி வாயிலாக பல்கலைக்கழகத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசி நாள் | **07.05.2021** | வெள்ளிக்கிழமை |
| பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகளுக்கான எழுத்துத் தேர்வுகள் துவங்கும் நாள் | **07.06.2021** | திங்கள்கிழமை |

மேற்கண்ட தகவலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் தெரிந்துகொள்ளும் வகையில் சுற்றறிக்கை வாயிலாகவும் கல்லூரி அறிவிப்புப் பலகையிலும் வெளியிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தேர்வு விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட கல்லூரிகள் வாயிலாக பரிந்துரைக்கப்பட வேண்டும்.

இளநிலைப் பட்டயம் மற்றும் சான்றிதழ் பாடப்பரிவுகளுக்கான தேர்வு விண்ணப்பங்களைப் பாடவாரியாக என தனித்தனியான இணைப்புக் கடிதங்களுடன் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தேர்வு விண்ணப்பங்களை பல்கலைக்கழக இணையதளத்திலிருந்து (**Website)** பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

இக்கடிதம் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகை அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

20/4/24

தேர்வு நெறியாளர் (பொ)